பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 10 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. சஞ்சீவ் கண்ணா நியமிக்கப்பட்டுள்ளார்.
- கல்வி மற்றும் விளையாட்டிற்கு தமிழக அரசு சமமான முக்கியத்துவம் அளித்து வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- புதிய கல்விக் கொள்கை உலகளவில் திறன் மற்றும் கல்வித் துறையில் இந்தியாவை தலைமைத்துவமாக திகழச் செய்யும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
- விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான பல்வேறு வழிவகைகளை மாநில அரசு ஏற்படுத்தி தந்துள்ளதாக அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.
- நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 59 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. சஞ்சீவ் கண்ணா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், ஓய்வுபெற உள்ள தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் உடனான ஆலோசனைக்குப் பிறகு திரு. சஞ்சீவ் கண்ணாவை உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. சஞ்சீவ் கண்ணா உச்சநீதிமன்றத்தின் 51வது தலைமை நீதிபதியாக அடுத்த மாதம் 11ஆம் தேதி பொறுப்பேற்க உள்ளார்.

அடுத்த ஆண்டு மே 13ஆம் தேதி வரை அவர் இப்பொறுப்பை வகிக்க உள்ளார்.

தற்போதை தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அடுத்த மாதம் 10ஆம் தேதி ஓய்வு பெற உள்ளார்.

<<<<>>>>

உச்சநீதிமன்றம் நாட்டு மக்களின் உண்மையான நீதிமன்றமாக திகழ்கிறது என்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்றம் தொடங்கப்பபட்டு 75 ஆண்டுகள் ஆனதையொட்டி, ஆகாஷ்வாணி செய்திப் பிரிவுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் நமது நாட்டின் உச்சநீதிமன்றம், மக்களுக்கு சேவையாற்றி தனித்துவத்துடன் திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகாஷ்வாணியில் தாம் தொகுப்பாளராக இருந்தது உள்ளிட்ட பல்வேறு நினைவுகளை நேர்காணலில் பகிர்ந்துள்ளார்.

இந்நிகழ்ச்சி எஃ.எம். கோல்டு உள்ளிட்ட அலைவரிசைகளில் இன்றிரவு மணி 9.30க்கு ஒலிபரப்பாகிறது.

**News on Air** செயலி, **newsonair.gov.in** இணையதளம் மற்றும் சமூக வலைதளங்களிலும் இந்நிகழ்ச்சியைக் காணலாம்.

<<<<>>>>

புதிய கல்விக் கொள்கை உலகளவில் திறன் மற்றும் கல்வித் துறையில் இந்தியாவை தலைமைத்துவமாக திகழச் செய்யும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் நேற்று உளவியல் குறித்த சர்வதேச மாநாட்டை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

மாணவர்களின் நலன் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் உளவியல் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டமைக்க மனநலனின் முக்கிய பங்கு குறித்து அமைச்சர் எடுத்துரைத்தார்.

அடுத்த 3 ஆண்டுகளில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று திரு. எல். முருகன் தெரிவித்தார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், தாய்லாந்து மற்றும் மொரீஷியஸ் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கல்வி மற்றும் விளையாட்டிற்கு தமிழக அரசு சமமான முக்கியத்துவம் அளித்து வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கோப்பை போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கி அவர் உரையாற்றினார்.

விளையாட்டுத் துறையில் உலக நாடுகளை ஈர்க்கும் வகையில் தமிழகம் புகழ்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

டென்னிஸ், செஸ், ஸ்குவாஷ் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச போட்டிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதோடு, மற்றவர்களையும் அந்த விளையாட்டுகளை நோக்கி ஈர்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தொழில்முறை விளையாட்டு வீரர்கள் உருவாக ஊக்கமளிப்பதாகவும் அவர் கூறினார்.

விளையாட்டுத் துறைக்கு மாநில அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

முன்னதாக அதிக பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் 3 இடங்களைப் பெற்ற சென்னை, செங்கல்பட்டு மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட அணிகளுக்கு முதலமைச்சர் கோப்பையை திரு. மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், தமிழகத்தில் விளையாட்டை மக்கள் இயக்கமாக உருவாக்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் விளையாட்டுத்துறை தலைநகராக தமிழகம் உருவெடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

<<<>>>

தீபாவளிப் பண்டிகை வரும் 31ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் அன்றைய தினம் மாத இறுதி நாளாக இருப்பதால் குடும்ப அட்டைதாரர்களுக்கு தடையின்றி பொருட்கள் கிடைக்கும் வகையில் நாளை மறுநாள் மாநிலத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளும் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறையில் பணியாற்றுவதற்கு ஈடாக அடுத்த மாதம் 16ஆம் தேதி சனிக்கிழமையன்று நியாயவிலைக் கடைகளுக்கு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<>>>

வேளாண் துறைக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்துடன் இணைந்து தொடங்கி வைத்தார்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

பின்னர் பேசிய வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான பல்வேறு வழிவகைகளை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளின் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வழிவகைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலைகொண்ட டானா தீவிர புயல் ஒடிசாவின் பிதர்கனிகா – தமாரா இடையே நள்ளிரவு கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அப்போது மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

இந்த தீவிர புயல் பின்னர் புயலாக வலுவிழக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒடிசாவின் கேந்திரபாரா, பத்ராக் மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மயூர்பஞ்ச், கட்டாக், ஜாஜ்பூர், பாலசோர், ஜகத்சிங்புர் மாவட்டங்களிலும் மழை பெய்து வருவதாக தெரிவித்துள்ளது.

மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அரசு நிர்வாகம் தயார் நிலையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்று முதல் இரு தினங்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

மும்பையில் இருந்து நேற்று பிற்பகல் கொழும்பு சென்ற விமானத்தில் குண்டுவெடிப்பு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக இறங்கியதாக பண்டாரநாயக சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவை முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

<<<<>>>>

விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோர் மற்றும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் விருதுக்கு அடுத்த மாதம் 14ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு விளையாட்டு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு சூரியசக்தி மின்மோட்டார் திட்டத்தின்கீழ் 500க்கும் மேற்பட்ட மோட்டார்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் நடத்திய சோதனையில் கணக்கில் வராத 43 ஆயிரத்து 900 ரூபாய் கைப்பற்றப்பட்டு 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

<<<<>>>>

நாமக்கல்லில் சுகாதாரமற்ற முறையில் பலகாரங்களை செய்ததாக 12 கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கோமுகி நதியணையில் இருந்து பாசனத்திற்காக இன்று முதல் 29 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

<<<<>>>>

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட விளாங்குடி கண்மாய் வரத்து கால்வாய் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் தேங்கிய மழைநீரை அகற்றும் பணியை ஆட்சியர் திருமதி சங்கீதா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலையில் கள்ளச்சாராயம் காய்ச்ச முயன்ற 2 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

‘உங்களைத் தேடி உங்கள் ஊர்’ திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம் புதுப்பேட்டை ஊராட்சியில் நியாயவிலைக் கடை, வேளாண் விரிவாக்க மையம் உள்ளிட்ட பகுதிகளில் ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 59 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி 44 புள்ளி 3 ஓவரில் 227 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

228 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நியூசிலாந்து மகளிர் அணி, 40 புள்ளி 4 ஓவரில் 168 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

<<<<>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டி தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று துர்க்மெனிஸ்தானை எதிர்கொள்கிறது.

தாய்லாந்தில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை – கோவா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கேரளா – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் பெங்கால் அணி – உத்தரப்பிரதேசத்தையும், ஹரியானா – ஜெய்ப்பூரையும் வென்றன.

ஹைதராபாதில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் தமிழக அணி – பட்னா அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் பெங்களூரு – புனேவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>